www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 8

தேர்வு எண் | | | | | | |

# ஆண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 2.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடை இணையும் சேர்த்து எழுதுக.**

1. பிரம்பு என்பது --------- வகையைச் சார்ந்த தாவரம்
அ) செடி ஆ) கொடி இ) மரம் ஈ) வேர்
2. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்
அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
3. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து அழைக்கப்படுகிறது
அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து
4. மெல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ---------
அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து
5. நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------
அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்
6. திருக்குறளில் விடுபட்ட சீர்களுள் சரியானவற்றைத் தேர்வு செய்க
வருமுன்னர் ------- வாழ்க்கை எரிமுன்னர்
-------- போலக் கெடும்
அ) காவாதான், வைத்தூறு ஆ) வைத்தூறு, காவாதான்
இ) வருமுன்னர், வைத்தூறு ஈ) வைத்தூறு, வருமுன்னர்
7. அடித்தான்–இச்சொல்லுக்கான வேர்ச்சொல்லைத் தேர்க
அ) அடித்து ஆ) அடிக்க இ) அடி ஈ) அடித்த
8. கற்றவருக்கு அழகு தருவது ---------
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
9. உரிமைப் பொருளில் --------- வேற்றுமைவரும்
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
10. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று -------
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு
11. 'கண்ணா வா!'–என்பது ---------த் தொடர்
அ) எழுவாய் ஆ) விளி இ) வினைமுற்று ஈ) வேற்றுமை
12. எம்.ஜி.ஆர்.படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம் ---------
அ) நடிப்பு ஆர்வம் ஆ) பள்ளி இல்லாமை இ) குடும்ப வறுமை ஈ) படிப்பில் ஆர்வமில்லாமை
13. தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ---------
அ) தூக்கிகொண்டு ஆ) தூக்குக்கொண்டு இ) தூக்கிக்கொண்டு ஈ) தூக்குகொண்டு
14. 'தடம்' என்ற சொல்லின் பொருள் யாது?
அ) யானை ஆ) அடையாளம் இ) புது வருவாய் ஈ) ஓசை
15. காலம் கரந்த பெயரெச்சத்தைத் தேர்ந்தெடுக்க
அ) வெண்ணிலவு ஆ) படம் பார் இ) வளர் தமிழ் ஈ) மலர்விழி

**கோடிட்ட இடங்களை நிரப்புக.** 4X1=4

16. தொல்காப்பியத்தின் ஆசிரியர் ---------
17. இயற்கைத்தவம் என்றழைக்கப்படும் நூல் ---------
18. முதற்குலோத்துங்க சோழனின் அவைக்களப்புலவராக இருந்தவர் ---------
19. வேற்றுமை --------- வகைப்படும்

பகுதி – II பிரிவு – 1

**ஏவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** 6X2=12

20. பழியின்றி வாழும் வழியாகத்திருக்குறள் கூறுவது யாது?
21. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
22. ஓவிய எழுத்து என்றால் என்ன?
23. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
24. தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?
25. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத்தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

26. எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?
27. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

பிரிவு – 2

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக. 6X2=12

28. மரபுத்தொடரைத் தொடரில் அமைத்து எழுதுக. வாழையடி வாழையாக
29. பின்வரும் தொடர்களை வல்லினம் மிகும். மிகா இடங்கள் என வகைப்படுத்துக.
   1. சுட்டுத்திரிபு 2. திசைப்பெயர்கள் 3. பெயரெச்சம் 4. உவமைத்தொகை
30. கலைச்சொல் எழுதுக. அ) LOOM ஆ) FACTORY
31. சரியான எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக.
   1. தாங்கள் படிக்கவேண்டிய புத்தகங்கள் இவை -------
   2. உங்களோடு வருவோர் நாம் ---------
32. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.
33. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.
34. சந்திப்பிழை என்றால் என்ன?
35. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்குத் தேவையானவை எவை எனக்கருதுகிறீர்கள்?

பகுதி – III பிரிவு – 1

ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x3=6

36. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கருதுவன யாவை?
37. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
38. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2x3=6

39. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

கவிமணி எனப் போற்றப்படும் தேசிக விநாயகனார், குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர். முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர், ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை உள்ளிட்ட பல கவிதை நூல்களையும் உமர்கய்யாம் பாடல்கள் என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

   அ) கவிமணி எனப் போற்றப்படுபவர் யார்?
   ஆ) கவிமணி எங்கு பிறந்தார்?
   இ) கவிமணி படைத்த நூல்கள் யாவை?
40. நோய்கள் பெருகக் காரணம் என்ன?
41. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x3=6

42. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
43. வேற்றுமை வகைகளை எழுதுக.
44. பிறிது மொழிதல் அணியை விளக்குக.

பகுதி – IV

அடிபிறழாமல் எழுதுக. 2+3=5

45. "சொல்லுக" எனத்தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.
46. அ) "கற்றோர்க்கு" எனத்தொடங்கும் குமரகுருபரர் பாடலை அடிமாறாமல் எழுதுக. (அல்லது)
   ஆ) "வாழ்க நிரந்தரம்" எனத்தொடங்கும் பாரதியார் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பகுதி – V

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 3x6=18

47. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக. (அல்லது)
   ஆ) உமது பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டைச் சரிசெய்து தருமாறு நகராட்சித்தலைவருக்கு விண்ணப்பம் தருக.
48. அ) வாழ்வுக்கு வெற்றி தரும் நற்பண்புகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக. (அல்லது)
   ஆ) மழைவளம் பெருக நாம் ஆற்ற வேண்டிய கடமைகளாக நீங்கள் கருதுவன யாவை?
49. அ) தமிழ்வழிக் கல்வி குறித்து திரு.வி.க. கூறுவன யாவை? (அல்லது)
   ஆ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

பகுதி – VI

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 2x8=16

50. அ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" என்ற கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
   ஆ) "காலம் உடன் வரும்" என்ற கதையைச் சுருக்கி எழுதுக.
51. அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:
   முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்தில் உள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை
   (அல்லது)
   ஆ) "சுற்றுச்சூழல் மாசுபாடு" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner